தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

எஸ். பட்டாபிராமன், எம். ஏ., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஞூ சித்திரைமீ 14உ (26-4-'22.) | ப. 1.

சஞ்சீவாஞ்சன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை மார் முதுகு இடுப்பு	வலி	தேள் பாம்புக் பூச்சிக் விஷக்	கடி	பல் கால் காது கை	நோவு

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்.

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணா எட்டு.

ஏஜெண்டுகள் தேவை!

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

சுதேசியமானது! உபயோகமானது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

தபால் கூலியுள்பட சந்தா
ஒரு வருஷத்திற்கு ரூ. 5—0—0
அரை வருஷத்திற்கு ரூ. 3—0—0

விஷய அடக்கம்.

1. தாய் வணக்கம் 2
2. நாங்கள் 2
3. துன்மதி வருஷத்தில் இந்தியாவின் நிலைமை 3
4. பூமியின் பிறப்பு 4
ஸ்ரீமான் பி.என். அப்புஸ்வாமி ஐயர், பி.ஏ.பி.எல்.
5. மனோ ராஜ்ஜியம் 5
6. சுதேச கீதங்கள் 6

தமிழ் உலகு

துந்துபிஹு சித்திரைமீ 1௳

தாய் வணக்கம்

"இ[illegible] கொள்" என்பது [illegible] சுருதி வாக்கியம் [illegible] தாய் பாஷையும் [illegible] [illegible] ஒரு வாரப் பத்திரிகை பிரசுரிக்கப் புகும் நாங்கள், தமிழ்த் தாயை வணங்கித் துவக்குகின்றோம். [illegible] [illegible] பாரதியார் பாடியிருக்கின்றார்.

இனியொரு சொல்லினைக் கேட்பேன்!—
இனி எது செய்வேன்! என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை—
இங்கு கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!
"புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.
சொல்லவும் கூடுவதில்லை—அவை
சொல்லுந்திறமை தமிழ் மொழிக்கில்லை.
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்."
என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசை யெனக் கெய்திடலாமோ!
சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்.

இப்படி தாயைத் தவிக்க விடுவது தமிழ் மக்கள் இயல்பன்று.

சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று

சால்புறக் கண்டவர் தாய்நாடு. என்றபடி, அவ்வித உயர்நிலை பெற்றிருந்தவர் வழித் தோன்றிய இக்காலத்து தமிழரும் ஏதோ வெளிநாட்டு நாகரீகத்தால் தாக்குண்டு சற்று மெய்மறந்திருந்தார்கள் எனினும் அவருக்கு இயற்கையாய் தாய் மீதுள்ள அன்பு அழியுமோ! ஆகவே, தமிழ் [illegible]க்கண இலக்கியங்கள் நன்குணர்ந்து பாண்டித்தியம் அடைந்த பெரியோர் மட்டுமல்ல, ஏழைய பாமர ஜனங்களும்,

நாமமது தமிழரென கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றன்று
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.
பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்
மொழியில் இயற்றல் வேண்டும்.

என்ற உணர்வுற்று புதிய ஊக்கங்கொண்டிருக்கின்றனர். இவ்வாறே, நாம் மறப்பினும் மறவாத தமிழ்த்தாய்க்கு எங்களால் இயன்றவளவு தொண்டுசெய்வதே முதற் கடனெனக்கொண்டு எங்களைப் போல் ஊக்கங்கொண்ட பிறரும் ஒத்து உழைத்து உதவி செய்வார்கள் என்று நம்பி, தமிழ் நாட்டு வர்த்தமானங்கள், தமிழருக்கு உறும் சம்பவங்கள், பிறநாட்டில் குடியேறியிருக்கும் தமிழரின் அநுபவங்கள் முதலிய சமாசாரங்கள் அடங்கியதும் தமிழ்த்தாய்க்கு பலவிதத்தாலும் தொண்டு புரிவதுமான "தமிழ்உலகு" என்ற பெயர் கொண்ட இந்த வார பத்திரிகையை பிரசுரிக்கின்றோம்.

நாங்கள்.

தற்காலம் தமிழ் நாட்டில் பத்திரிகைகள் பல இருந்த போதும், தமிழ் மக்களின் ஊக்கத்தை [illegible] அவர்களுடைய [illegible] [illegible] [illegible] பத்திரிகைகள் எத்தனை இருந்தாலும் போதாது என்ற உணர்ச்சியால் தூண்டப்பட்டு இந்தப் பத்திரிகையை ஆரம்பித்திருக்கிறோம். [illegible] [illegible] சமாசாரங்களைப் பிரசுரம் செய்யும் [illegible] பத்திரிகைகள் ஒரு பக்கமும் [illegible] [illegible] செந்தமிழ் நடையையே [illegible] அநுசரித்து பண்டிதர்களுக்கும் தமிழ்ப் பயிற்சியுள்ளவருக்குமே பலன் அளிக்கக்கூடிய பத்திரிகைகள் மற்றொரு புறமும் இருக்க, இவை நடுவே, தமிழ் பாஷையில் தற்காலம் ஏற்பட்டுள்ள கிளர்ச்சியையும் நம்தேசம் தனக்குரிய உன்னத ஸ்திதியை அடையவேண்டியதையும் உத்தேசித்து தமிழ் மக்களின் கல்விப்பிவிருத்தி, லௌகிக சாமர்த்தியம், கலைப்பயிற்சி, தேசாபிமானம் இவற்றிற்கு தூண்டுகோல் போன்ற பத்திரிகைகளும் அவசியம் உலவிவரவேண்டுமென்று, தமிழபிமானமும் ஆங்கிலக் கல்வியும் உள்ள சிலர் சேர்ந்து, எளிய நடையில் எழுதப்பட்டு பாமர ஜனங்களுக்கும் பண்டிதர்களுக்கும் ஒருங்கே உதவ உத்தேசிக்கும் இந்தப் பத்திரிகையை பிரசுரம் செய்ய முன் வந்திருக்கின்றனர். "தமிழ் உலகு" என்று பெயர் புனைந்த இந்தப்பத்திரிகை புதன் கிழமை தோறும் வெளிவரும்.

பிரதிவாரமும் லௌகிக விஷயங்களைப்பற்றிக் குறிப்புகளும் வியாசங்களும் சரித்திர சம்பந்தமான விஷயங்களும் பெரியோர்களின் வாழ்நாட்களைப்பற்றிய வியாசங்களும் சாஸ்திர ஆராய்ச்சிக் குறிப்புகளும் தமிழ்க்கவிகளின் பாடல்கள், வேறு தமிழ்புஸ்தகங்கள் இவைகளின் விமரிசனங்களும் சிறு கதைகளும் வேறு பலவிதமான பொருள்களும் அடங்கியதாகச் செய்ய வேண்டுமென்று எங்களது உத்தேசம். ஆகவே, தமிழைப்பாராட்டவேண்டும், தமிழர் முற்போக்கு அடைதல் வேண்டும் என்பவர் யாவரும் இதை வாங்கி வாசித்து எங்கள் முயற்சி பயனடைவதில் உதவி புரிவரென்று நம்புகின்றோம்.

துன்மதி வருஷத்தில் இந்தியாவின் நிலைமை.

சென்ற வருஷத்தில் நமது நாட்டின் நிலைமையைக்கண்டு நாம் சந்தோஷிப்பதற்கு யாதொரு காரணமும் காணோம். ஆயினும் அப்படியும் சொல்வது சரியன்று. ஏனெனில் தேசிய உழைப்பில் ஊக்கமும் ஓர் புது இயக்கமும் இந்த வருஷம் வெளிவந்தது போல், காங்கிரஸ் மகா சபை ஏற்பட்ட இந்த 40 வருஷங்களில் எந்த வருஷத்திலும் ஏற்பட்டதில்லை. இவ்வளவும் ஒரு மஹானுடைய புண்ணிய விசேஷமென்றே நினைக்கவேண்டியதாயிருக்கிறது. மகாத்மாகாந்தியால் ஸ்தாபிக்கப்பட்ட ஒற்றுழையாமை என்ற வழியின் மஹிமை ஒன்றே முக்கியமாகச் சொல்லலாம். ஆங்கில ராஜாங்கம் ஏற்பட்ட பின் நூற்றைம்பதாண்டுகளாக, தங்களுடைய பிராசீன நாகரீகத்தையும், கல்வியையும், தெய்வ பக்தியையும், அடக்கத்தையும் கையிழந்து, உத்தியோக ஆசையினால் புதுப்படிப்புகளிலும், பணப்பற்றினால் நமது நாட்டிற்குப் பொருந்தாத புது விதமான கைத்தொழில், வியாபாரம் முதலான முறைகளிலும் நிரந்த புத்தியும் ஸ்வயமரியாதையுமில்லாததால் மேல் நாட்டு நாகரீகத்திலும் மோஹித்துக் கைப்பழத்தையிழந்து, துறட்டுப்பழத்திற்காசைப் பட்டகதையாய் பிறர்மதிப்பையும் இழந்து நம்மை நாம் நொந்து உயிர்ப்பிணங்களாகக் காலந்தள்ளி வருகின்றோம். இப்பேற்கொத்த கீழான நிலைமையிலிருந்து நம்மைக்கை தூக்கி விட்டு நாமும் ஆண்மக்கள், நமக்கும் வசித்து வாழ்நாளின் சுவையை அனுபவிப்பதற் கருஹதை உண்டென்னும் எண்ணத்தை நமது மனதில் நாட்டினது ஒற்றுழையாமை யென்ற தாரக மந்திரமே.

ஆனால், இந்தமேலான வழியில் இந்தியா எவ்வளவு உயர்ந்தஸ்திதியை அடைந்திருக்கலாமோ அவ்வளவடைய வில்லையென்பதையும் நாமொத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. சத்தியம், அஹிம்சை என்ற இரண்டு தத்துவங்களைப்பற்றி மஹாத்மா மன்றாடியும் அவை நமக்கியற்கைக்குணங்களாக ஆகாததே இதற்குக் காரணம். ஆயினும் இத்தகைய சுத்தசாத்வீககுணங்கள் நம்தேசத்தார் முப்பதுகோடி ஜனங்களுக்கும் வெகு சீக்கிரத்தில் பரவி விடுமென்று நாம் நினைப்பது அனுபவதற்கு விரோதமாயிருப்பதால், அவைகளை ஆதாரமாய்க்கொண்டு ராஜாங்கச்சீர்திருத்தங்களில் நாம் பிரவேசிப்பது உசிதமன்று. ஆகையால் ஒற்றுழையாமை என்ற விதியானது மேலானதாயிருந்தும், வரிகள் மறுப்பது, சட்டசபைகளை உல்லங்கனம் செய்வது முதலான காரியங்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளத்தகாதவை யென்பதே நமக்கு தோற்றுகிறது.

காங்கிரஸ் மகாசபையைச் சேர்ந்தபெரும்பான்மையோரும் வர வர இந்த அபிப்பிராயத்தை கொண்டிருக்கிறார்கள் என்பது, பார்டோலியில் 'ஒர்க்கிங்கமிட்டி'யால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களிலிருந்தும் அதன் பிறகு டில்லியில் கூடிய இந்தியா கமிட்டியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களை சாதாரணமாக அனுஷ்டானத்திற்குக்கொண்டு வராததிலிருந்தும நன்குணரலாம். 'கதரை'ப்பரவச் செய்தல், காங்கிரசுக்கு மெம்பர்களையும் வாலண்டியர்களையும் சேர்த்தல், ஸ்வராஜ்ய நிதிக்கு பணம் சேர்த்தல், தீண்டாமை யொழித்தல் முதலான காரியங்களில் இந்தியர் எல்லோரும், எவ்வகுப்பினராயினும், எந்தமதஸ்தராயினும், சேர்ந்து அவைகளை அனுஷ்டானததிற்குக் கொண்டு வரலாம். நம்தேசத்தின் க்ஷேமத்தை விருத்தி செய்யக்கூடிய இக்காரியங்களில் ஒன்று சேர்வதால் நமது ஜனங்களுக்குள் ஓர் புதிய ஒற்றுமையும் ஏற்படும். மிதவாதிகளுக்கும், ஒற்றுழைப்பவர்களுக்கும் கூட காங்கிரஸில் இடமுண்டாகும்.

அரசியல்.

இப்படிச் சொல்வதிலிருந்து நமது தேசத்தின் முன்னேற்றம் நாமரசாகங்த்தையண்டித்தானடைய வேண்டுமென்பது எமதெண்ணமென்று நினைத்தல் தவறு. நமக்கு அரசாங்கத்தால் விமோசனம் என்ற வெண்ணம் என்றைக்கும் கிடையாது. பற்பலவாண்டுகளாக அரசாங்கமென்ற கழியை ஊனிநடந்து நடந்து நமது தேசத்தார்க்கிப்பொழுது கழியில்லாமல் நடப்பது ஓர் புதுமையாயும் சாத்தியமில்லாததாயும் ஆகிவிட்டது. ஆனால் அரசாங்கத்தை நம்பி ஒரு காரியமும் நடக்காது. இந்தியாவிலுள்ள ராஜப்பிரதிநிதிமுதலானவர்களைச் சொல்வதில் பயனில்லை. ரெடிங் பிரபு இங்கே வந்து ஒரு வருஷமாகிறது. வந்த தினமுதல் நாளது தேதி வரையில் அவர் நியாயமே தனது மூலமந்திரமென்றும் சக்கிரவர்த்தியின் பிரஜைகளை யெல்லோரையும் சமானமாக நடத்துவதே தனது ராஜ்யதந்திரத்தின் முக்கியகருத்தென்றும் பலதடவை சொல்லியிருக்கிறார். இருந்தும் இன்றைய தினம் நாம் காண்பதென்ன. மகாத்மாகாந்தி முதல் தேசீயப்பாட்டுகள் பாடும் சிறுபிள்ளைகள் பெண்கள் உள்பட ஆயிரக்கணக்கான இந்தியர்களும் இந்தியாவிடத்தில் நிஜபக்தியுள்ள சில ஐரோப்பியர்களும் கூட ஜெயிலில் இருக்கிறார்கள். தேசாபிமானம்தான் இவர்களுடைய மகத்தான அபராதம். தவிர, சில நாட்களுக்கு முந்தி கல்கத்தா ஆங்கில வியாபாரச் சங்கத்தில், ஸர் ராபர்ட்டு வாட்ஸன் ஸ்மித் என்பவர், இந்தியர்களுக்கும் சுயாட்சிக்கும் வெகு தூரமென்றும், இந்தியர்கள் ஆங்கிலேயர்களைவிட எவ்விதத்திலும் கீழானவர்களென்றும், இருதரத்தாருக்கும் இந்தியாவில் சமான நிலை கொடுப்பது மூடத்தனமென்றும் கூறினார். இப்படிச் சொன்னதால் தேசம் முழுவதும் ஓர் ஆரவாரம் ஏற்பட்டதின் பேரில் அத்தைரியசாலி தான் சொன்னது தவறென்று ஒப்புக்கொண்டார் ஆயினும் இந்தியாவிலிருக்கும் ஆங்கிலேயப் பத்திரிகைகள் அநேகமாக இந்தியர்களுடைய ஆத்திரத்தைப் பரிஹாஸம் பண்ணினவேயொழிய, அவர் சொன்னது தவறென்று சொல்லவில்லை. தனது சமதிருஷ்டியைப்பற்றிப் பறையறைந்து வரும் ரெடிங் பிரபுவும் அவரது அரசாங்கமும் இந்த விஷயத்தைக் காதிலே போட்டுக்கொண்டதாகவும் தெரியவில்லை.

இவைகளிலிருந்து நாம் தெரிந்துக்கொள்ள வேண்டியதென்ன. இந்தியாவிலிருந்து ராஜ்பம் நடத்துப்பவர்களால் சுயமாகச்[illegible]செய்யக் கூடிய [illegible] தோன்றுமில்லை. அவர்கள் இங்கே வா[illegible] முதலான தொழில்களில் அமர்ந்திருக்கும் ஆங்கிலேயர்களுக்குக் கட்டுப்பட்டே நடக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில் இவர்களுக்கு இங்கிலாந்தில் அதிகச் செல்வாக்குண்டு. இங்கிலாந்திலிருக்கும் சாதாரண ஜனங்களுக்கு நமது நாடு வெளுப்போ கறுப்போவென்று கூட தெரியாது. ஆகையால் இந்தியாவில் வாசம் செய்து ஏராளமாக திரவியம் சம்பாதித்து திரும்ப இங்கிலாந்துக்குப் போகிறவர்கள் இந்தியாவில் தங்கி[illegible]
கும் தம்தேசத்தார்க்கநுகுணமாகவே [illegible]
மெண்டு முதலான விடங்களில் இந்தியா[illegible]
க்கும் விஷயங்களைப்பற்றி ஒளித்[illegible]
களுக்கு விரோதமாக மாற்றியும் [illegible]
லும், இந்தியாவின் ஜனங்கள் [illegible]

யோரும் நாகரீக மற்றவர்கள், சுயாட்சிக்கருக ரல்லரென்ற எண்ணம் இங்கிலாந்தில் பரவியிருக் கிறது.

இளவரசர் வரவு.

இந்தவெண்ணம் இளவரசர் வரவினாலும், அவ ரை ஒற்றுமையாதார் தமதுதீர்மானத்தை யநு சரித்து வரவேற்றாமலிருந்ததாலும், விருத்திய டைந்திருக்கிறது. இளவரசரை யெந்தகாரியத்தை உத்தேசித்து ஆங்கில மந்திரிகள் அனுப்பினார்க ளோ அதுநிறைவேறவில்லை. இளவரசரை வரவே ற்றாதது அவரையும் அவர் மூலமாகச் சக்கிரவர்த் தியையே அவமதித்ததாகிற தென்றும் இதிலிரு ந்து இந்தியர்கள் ஆங்கில சாம்ராஜ்யத்தினின்று மே நீங்க விரும்புகிறார்களென்று தெரியவருகிற தென்றும் இங்கிலாந்தில் ஒரபிப்பிராயம் மேலிட்டி ருக்கிறது. ஆகையால் அரசாங்கத்தார் கடிவாளத் தை யிழுத்துப் பிடிக்கவேணுமென்று ஓர் ஆர்ப் பாட்டமும் இங்கிலாந்தில் ஏற்பட்டிருக்கிறது. இது மிஸ்டர் மாண்டகு இந்திய மந்திரித்துவத்தை ராஜினாமா கொடுத்ததினின்றும் பலப்பட்டிருக்கி றது. இந்த அபிப்பிராயங்களெல்லாம் தப்பென்று நமக்கு நன்றாய்த் தெரியும். ஆயினும், அரசாங்கத்தா ரின் தப்பபிப்பிராயத்தைத் திருத்துவது நமக்கு சாத்தியமுமில்லை. நமது கடமையுமில்லை. நமது கடமை பார்டோலி தீர்மானங்களை நிறைவேற்ற முயற்சிப்பதே.

இந்தியாவின் பொருள் நிலை.

தற்காலத்தில் இந்தியாவின் பொருள் நிலையை யோசித்தால், இவ்விதமுயற்சி எவ்வளவு அவசிய மென்பது நன்கு விளங்கும். இந்நாட்டு வருஷங் களில் இந்தியாவின் செலவு வருமானத்தைவிட 90 கோடியதிகரித்திருக்கிறது. வருகிற வருஷ த்திற்குச் செலவுக்குச் சரியாக வருமானத்தை உய ர்த்த 28 கோடி ரூபாய்க்கு வரிகளை ஜாஸ்தி பண் ணியிருக்கிறார்கள். வரிகள் ஜாஸ்தியாக ஆக, நிலத் தின் செழிப்பும் ஜனங்களின் சம்பாதிக்கும் திற மையும், குறைந்து கொண்டே வருகின்றன. பசி யினால் லக்ஷக்கணக்கான ஜனங்கள் வருஷா வரு ஷம் மடிகின்றார்கள். இவைகளை யோசிக்குங்கால் அரசாங்கத்தார் கைபார்த்து நிற்பதிற் பயனில்லை. நமது க்ஷேமத்தை நாமே நாடவேண்டுமெ ன்பது நன்கு புலப்படும்.

பூமியின் பிறப்பு.

ஸ்ரீமான் பி. என். அப்புஸ்வாமி ஐயர் அவர்கள், பி. ஏ., பி. எல். எழுதியது.

நாம் வாழும் இப் பூமியானது இப்பொழுது இருப்பது போலவே எப்பொழுதும் இருந்துவந்த தில்லை என்பது உறுதி. ஏனெனில் இக்காலத்தி லும்கூட நாள்தோறும், வருஷம் தோறும் அதன் மேல்பரப்பானது பல இடங்களில் பலவாறு மாறிவருவதை நாம் காண்கிறோம். ஆங்காங்கு மலைகள் தள்ளாடித் தாழ்ந்துபோவதையும், பனி யாறுகள் குன்றிக் குறைவதையும், அலைகடலின் நடுவினின்று தீவுகள் எழுந்து தோன்றுவதையும் நாம் பார்க்கிறோம். மழையும், பனியும், காற்றும் ...லும், எரிமலையும் பூகம்பமும் நமது பூமியின் ...கட்டுதல் இடித்தல் ஆகிய இருவகை வேலை ...இடையறாது செய்துவருவதைக் காண்கி ...கத்துவநூல் ஆராச்சியினின்று இவ் ...ரியங்கள் இன்று நேற்றுத் ...பல்ல, எண்கடந்த காலமாக நடந்து வருகின்றன வென்பதை அறிகிறோம். வருஷ முழுவதும் பனிப்போர்வை போர்த்திருக் கும் தென்வட துருவங்கள் இரண்டிலும் இக் காலத்தில் பனியில் பதிந்து காணப்படும் சில செடி வகைகள்—உஷ்ணப் பாங்கான இடங்களில் மட்டுமே வளரக்கூடியன—வெகு காலத்துக்கு முன் அவ்விடத்திலே தழைத்து வளர்ந்து வந் திருக்கவேண்டு மென்பதற்கு ஆதாரங்களிருக் கின்றன. இக் காலத்தில் நெற்பயிர் விளையும் உஷ்ணப்பாங்கான இடங்களில் முன்னொரு காலத் தில் பனியாறுகள் ஓடிய அடையாளங்களும், மலையுச்சிகளின் மீது கடற் சிப்பிகளும், கடலினுள் மண் வாழ்க்கைக் குரிய தனிக் குறிகளும் காணப்படுகின்றன. மேலும் பூமி யானது வரவரக் குளிர்ந்து வருகிறதென்பதும், முன்னொரு காலத்தில் அது முற்றிலும் உருகி நீர் போன்றிருந்த தென்பதும் தெரியவருகிறது.

அதற்கு முன் பூமி எவ்வாறிருந்தது? அஃது எங்கிருந்து வந்தது? அது முதன்முதல் உண்டாயபோது எவ்வுருவம் பெற்றிருந்தது? அது உண்டாகி எவ்வளவு காலம் ஆகின்றது? அதன் மீது ஆதி முதலே உயிர் இருந்ததா? அல்லது உயிர் நடுவில் உண்டாயதா? அவ் உயிர் பூமியினின்றே எழுந்ததா? அல்லது பிற உலகங் களுள் யாதாயினும் ஒன்றிலிருந்து கொணரப் பட்டதா? கொணரப்பட்டதாயின் அங்கு எவ் வாறு உயிர் உண்டாயிற்று? இங்கு ஏன், எவ்வாறு வந்தது? பூமியில் உள்ள உயிர் எப்பொழுதும் ஒரே இயற்கை உடையதா? அதன் தன்மைகளில் மாறுபாடுகள் உளவாயின் ஏன் அவை உண் டாயின? இன்னும் மேன்மேலும் மாறுபாடுகள் உண்டாவனவா? இன்னும் எவ்வளவு காலம் பூமியானது அவ் உயிரைக் காப்பாற்றக் கூடும்? அவ் உயிர் நசிவுண்டாயின் அதன் பின்னர் நமது பூமியின் கதி என்ன? உயிரே இல்லா திருந்த ஒரு காலமும் உண்டோ? என்னும் இவற்றையும் இவைபோன்ற விஷயங்கள் பலவற் றையும் பண்டைக்கால முதல் அறிவாளர் ஆரா முயன்று வந்திருக்கின்றனர். ஒவ்வொரு காலத் திலும் ஒவ்வொரு நாட்டிலும் அவரவர் அறிவுக் கும் ஊகத்துக்கும் இசைந்த கொள்கைகளை வெளியிட்டு இடருற்றும், கீர்த்தி பெற்றும், இகழ்ந்தும், கையாண்டும், வந்திருக்கின்றனர். ஒவ்வொரு மதத்தாரின் வேதப் புத்தகங்களிலும் இவ்விஷயங்களைப் பற்றிய கொள்கைகள் ஒன்றோ பலவோ காணப்படுகின்றன.

அக்கொள்கைகளே மிகவும் பழைமையானவை. அவை மிக மேதாவிகளால் எடுத்தாளப்படினும் அக் காலத்து அறிவோடு இயைந்தனவே யன்றி இக் காலம் வரை கிட்டிய அறிவோடு ஒவ்வா. ஆகையால் நாம் இங்கு அவற்றை எடுத்துக் கூற வேண்டியதில்லை. அக்காலத்திலும் இயற்கைத் தத்துவங்களின் உண்மையை ஆராய முயன்றதும், அறிவைத்தரும் ஆராய்ச்சிகளுக்கு வேண்டிய துணைக்கருவிகளின் உதவியின்றியே கூறிய புத் தியாலும், நுண்ணிய தேர்ச்சியாலும் சிற்சில தத்துவங்களை அவர் உணர்ந்ததும், நமக்கு வியப் பைத் தருகின்றன.

அதன் பின்னர் சரித்திரகாலத்தில் அறிவாளர் அவ் உண்மைகளைப் பற்றி மேன்மேலும் அறிய முயன்று, ஆராய்ச்சிகள் பல செய்து தனித்தும் கூடியும் முயற்சிகள் பல செய்துவரும் காலை தாம் கொண்ட கொள்கைகளிற் சில முற்றும் தவறென் றும், சில மாற்றியமைத்தற்குரியன என்றும், சிலவற்றுக்கும் புதிய காரணங்கள் தேடவேண்டு மென்றும், சிலவற்றை ஒருவாறு நன்கு அறிந்து

கொண்டதாகவே கருதுதல் வேண்டுமென்றும் அறிந்தனர். நாளுக்கு நாள் வளர்ந்து வரும் இவ்வறிவு நாட்டுக்கு நாடு ஆளுக்கு ஆள் வித்தியாசப்பட்டு ஒருவாறு தடைபட்டுத் தவங்கி பெருகிப் பரந்து ஆழ்ந்து செல்லத் தலைப்பட்டது.

சற்றேறக் குறைய ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் (லாப்லேஸ்) என்னும் பிரான்சு தேச நிபுணர் நமது பூமி எவ்வாறு உண்டாயிற்று என்னும் விஷயத்தை அறிய முயன்று பல காலம் பல ஆராய்ச்சிகள் செய்துக் கடைசியாகத் தனது தூமபடலக் கொள்கையை வெளியிட்டார். அஃது என்னவென்றால்:—நாம் தற்காலத்தில் சூரியவம்சம் என்று கூறும் சூரியனும் அதன் ஆட்சிக்கு உட்பட்ட கிரகங்களும் அவற்றின் உபகிரகங்களும் சேர்ந்து ஆதியில் ஒரு காலத்தில் சொலிக்கும் தீக் காற்றாயிருந்தது. அப்பொழுது அது ஆகாயத்தில் படர்ந்த புகைபோன்றிருந்தது. அக் காற்று இப்பொழுது சூரியவம்சம் அளாவியுள்ள இடத்தைக் காட்டிலும் அளவில் மிக்க இடமெங்கும் பரவியிருந்தது. தமது பூமியைக் காட்டிலும் பதின்மூன்று லக்ஷம் மடங்கு பெரிதான சூரியனைக் காட்டிலும் பத்துலக்ஷம் மடங்காவது பெரிதாயிருந்தது இப் புகைக் காற்று. அது முதலில் மெல்லெனச் சுழன்று கொண்டிருந்தது. பிறகு வர வர சூடு குறையக்குறைய அளவு குறைய ஆரம்பித்தது. அளவு சுருங்குவதற் கேற்பச் சுழற்சியின் வேகம் மிகுபடத் தொடங்கியது. வெகு வேகமாய்ச் சுழலும்போது வளையம் போன்ற ஒரு வஸ்துத் தொகுதியானது தீப் புகைத் தொகுதியினின்றும் வேறாகிப் பிரிந்து அதைச்சுற்றியே சிறிது காலம் சுழன்று வந்தது. இதை இப்பொழுதும் சனியின் பிம்பத்தைச் சுற்றியுள்ள வளையத்துக்கு ஒப்பிடலாம். பிறகு இந்தப்பட்டையிலுள்ள பொருள் யாவும் ஒன்றாகத் திரண்டு ஒரு பிண்டமாயிற்று. இதுவே முதல் முதல் உண்டாகிய கிரகம். இது (நெப்ட்யூன் ஆய்) இருக்கலாம். தீப்புகையின் சூடு குறையக் குறைய, அதன் அளவு சுருங்கச் சுருங்க, அது சுழலும் வேகம் மிகுபட மிகுபட, வெவ்வேறு வளையங்கள் பிரிந்து பிரிந்து, திரண்டு, உருண்டு சுழலுவதால் வெவ்வேறு கிரகங்கள் உண்டாயின. அவற்றுள் நமது பூமியும் ஒன்று. பிரிந்த கிரகங்கள் போகப் பாக்கி மீந்தது நமது சூரியன். பூமியானது பிரியும்போது கிட்டத்தட்டக் காற்றுப் போலவே இருந்திருக்க வேண்டும். உருண்டு திரண்டு சுழன்றுவரும் பூமியும் சூடுகுறைந்து அளவு சுருங்கி முன்னிலும் வேகமாய்ச் சுழலவே அதனின்று தெறித்து விழுந்தது சந்திரன் என்னும் உபகிரகம். இது தான் லாப்லேஸ் என்பவர் எடுத்துக் கூறிய தூமபடலக் கொள்கை.

இக் கொள்கையை இப்பொழுது அறிவாளர் கிட்டத்தட்டச் சரியான கொள்கையென்றே கூறுகின்றனர். ஆனால் இதில் ஒன்று மட்டும் சரியல்லவென்கின்றனர். அஃதென்னவெனில் லாப்லேஸ் கூறியபடி ஆதிக் காலத்திலிருந்தது சொலித்துச் சுழலும் தீக்காற்றல்ல; ஆதியில் ஒளியற்று அசைவற்று இருண்டதொரு பொருள் இருந்தது. அதிலுள்ள அணுக்கள் ஒன்றையொன்று இழுப்பதால் அசைவும், அசைவினால் சுழற்சியும் ஒளியும் உண்டாயிற்று; இதைத் தான் லாப்லேஸ் அடிப்படையானதாக எடுத்துக்கொண்டிருக்கிறார் என்றும், அதற்கு மேல் நடந்ததாக லாப்லேஸ் கூறும் விஷயங்களெல்லாம் மெய்தானென்றும் தற்காலத்தில் அறிவாளர் கூறுகின்றனர்.

மனோ ராஜ்ஜியம்.

ஒவ்வொருவனுக்கும் உரித்தான பெரிய இராஜ்ஜியம் மனது என்பது. அந்த இராஜ்ஜியத்தில் எண்ணங்கள் பிரஜைகளாவன. நாம் திடமாய் கொள்ளும் தீர்மானங்களை முக்ய நகரங்கள் என்னலாம். நம்மைக் களிப்பிக்கச்செய்யும் மனோபாவங்களே ஜீவநதிகள். இந்தப் பிரதேசத்திற்கு எல்லாம் நாம் (தான்) அரசன். என்ன கஷ்டங்கள் நேரிடினும் சோராமல் விடாது கைப்பற்றும் நம்முடைய கொள்கைகளே இந்த இராஜ்ஜியத்திற்கு கோட்டை கொத்தளங்கள் முதலான அரண்கள். இவைகளால் தான் (நாம்) என்ற அரசன் சற்றும் கிலேசப்படாமல் தன் பிரஜைகளாய எண்ணங்களுக்கு என்ன இடையூறுகள் நேரிடினும் சற்றும் தளராத தைரியத்துடன் வீற்று இருக்கிறான்.

இப்படி ஒவ்வொருவருக்கும் இயற்கையாயுள்ள இப்பெரும் இராஜ்ஜியத்தை அவனவன் நன்கு அரசாளவேண்டியது முதற் கடமையாகும். பிரஜைகளான நம்முடைய எண்ணங்களில் தீயனவற்றைக்கடிந்து நல்லவற்றை வளரச் செய்து போற்றிக் காப்பாற்ற வேண்டியது அரசனின் முதற்கடமை. கடவுளே, தன் பிரஜைகளாகிய நம்மில் சாதுக்களை காப்பாற்றும் பொருட்டும் கெட்டகாரியங்கள் செய்பவரை அழிப்பதற்கும் அடிக்கடி பூமியில் அவதரிக்கின்றேன் என்று இந்தக் கடமை முறையை எடுததுக் காட்டியிருக்கிறாரல்லவா? மேலும், அரசன் தன் பிரஜைகளுக்கு கஷ்டங்கள் நேரிட்டால், வியாகுலமடைந்து ஏங்கி கதியற்று இராமல், சற்றும் கலங்காமல் அந்த கஷ்டங்களுக்கு எப்படி பரிகாரம் தேடுகிறானோ, அதுபோல, நாமும் நமது எண்ணங்கள் பயனடைவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்தும், அவைகள் இடையிடை தடங்கல் எய்தி மெலிய நேரிடின் அவைகள் சீர் குலைந்து போகாமலிருக்கவேண்டிய முயற்சிகள் சற்றும் ஏங்காமல் செய்யவேண்டியது அவசியம்.

வேறு வெளிப்பொருள்களை நாம் படைத்த ஐசுவரியம் என்று எண்ணியிருப்பதில் பெருமை ஒன்றுமில்லை. வெளியிலுள்ள மனிதரை அடக்கி ஆளும் அரசனுக்குக்கூட நாமாகிய அரசனைக் கொண்டு எண்ணங்களாகிய பிரஜைகளை சீர்திருத்தி அடக்கி யாளுவதைப்போன்ற பெருமை கிடையாது. நமக்கு எல்லோருக்கும் ஜனங்களை ஆண்டு ராஜ்ஜியபாரம் வகிக்கக்கிடைக்காது என்றாலும் நம்மில் ஒவ்வொருவருக்கும் மனோராஜ்ஜியம் என்ற அகண்டதோர் நாடு இருக்கின்றது. அதிலுள்ள பிரஜைகளைக்கவனியாமல் பாம்பும் புலியும் வாழும் காடுபோலாக்கி யாருக்கு என்ன கஷ்டம் ஏற்பட்டாலும் எவர் எந்தத்தீமைகளால் வருந்தினும் நாம் நம்மரண்மனையில் சுகமாக வசிப்போம் என்னும் கொடுங்கோல் மன்னனாக நாம் இருத்தல் கூடாது. அப்படியல்லாமல் சகல பிரஜைகளிடத்தும் கருணை வாய்ந்தவனாய், தீய எண்ணங்களை எழுமுன் அடக்குபவனாய், நல்ல எண்ணங்கள் தீய சகவாசத்தால் கேடுறா வண்ணம் காப்பவனாய், இருதயமாகிய தன்னுடைய நாடு முழுவதும் தூய்மையடைந்து நல்லறத்தில் நின்று செழித்து ஓங்கும்படி செய்விப்பவனாய் இருந்தால், “மனம்காக்கும் மன்னவன்” என்று உலகில் பேரெடுப்பதோடு கூட தனக்குக்கொடுக்கப்பட்ட ராஜ்ஜியத்தை கடமை கைப்பிடித்து ஆண்டவன் இவன்; மேன் மேலும் பெரியவைகளான கடமைகளை இவனுக்கு அளித்தல் தகும் என்று எல்லோராலும் மெச்சப்படுவான். வெளி அரசரும் இவன் நம்மிலும் பெரிய அரசதிலகன் என்று பாராட்டுவார்கள்.

சுதேச கீதங்கள். *

இவை வரகவி சுப்பிரமணிய பாரதியாரின் கள் முழுமையும் திரட்டி பன்னிரண்டு பகுதிகளாக அச்சிட்டு வெளிவரும் புஸ்தகங்களில் முதலிரண்டில் அடங்கிய பாடல்கள். தேசிய உணர்ச்சியை எழுப்பும் பாட்டுகள் அநேகம் இந்த புஸ்தகங்களிலிருக்கின்றன. சிற்சில பாடல்கள் இதற்குள்ளேயே நாடெங்கும் பரவிப்பாடப் பட்டு வருகின்றன. முதற்பாட்டாகிய "வந்தே மாதர மென்போம்" என்ற ஆனந்தக்களிப்பை அறியாத சுதேசாபிமானிகள் இல்லை. எல்லோரும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சுலபமான நடையில் பண்டிதரும் பாமரரும் மெச்சும்படியாய் இனிய கருத்துகள் அழகுற விளங்க விளக்குவது இவரது பாடல்கள். நாடோடியாய் வழங்கி வரும் சாதாரணமெட்டுகளில் பாடக்கூடியவை. இவை பாடப்பாட தேசபக்தி அதிகரித்து மனம் உவந்து வீரம் பொங்கியெழும்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே—

[illegible]

"முப்பது கோடி முகமுடையாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்பு மொழி பதினெட்டுயாள், எனிற்
சிந்தனை யொன்றுடையாள்.
அறுபது கோடி தடக்கைகளாலும்
அறங்கள் நடத்துவள் தாய்—தனைச்
செறுவது நாடி வருபவரைத்துகள்
செய்து கிடத்துவள் தாய்."

என்று தாய் ஸ்வரூபத்தையும், அந்தத்தாயின் மணிக்கொடியின் கீழ்

"செந்தமிழ் நாட்டுப்பொருநர்—கொடுந்
தீக்கண் மறவர்கள் சேரன்றன் வீரர்
சிந்தை துணிந்த தெலுங்கர்—தாயின்
சேவடிக்கே பணிசெய்திடு துளுவர்
கன்னட ரொட்டிய ரோடு—போரிற்
காலனு மஞ்சக்கலக்கு மராட்டர்
பொன்னகர்த் தேவர்களொப்ப—நிற்கும்
பொற்புடையா ரிந்துஸ்தானத்துமல்லர்
பூதல முற்றிடும் வரையும்—அறப்
போர் விறல் யாவும் மறப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில்
மறைவரும் கீர்த்தி கொள் ரஜபுத்ர வீரர்
பஞ்ச நதத்து பிறந்தோர்—முன்னைப்
பார்த்தன் முதற்பலர் வாழ்ந்த நன்னாட்டார்
துஞ்சும் பொழுதினுந்தாயின்—பதத்
தொண்டு நினைந்திடும் வங்கத்தினோரும்
சேர்ந்ததைக் காப்பது காணீர்."

என்று பாரத மாதாவை வணங்கி நிற்கும் பலவிதமான இந்தியர்களின் குண விசேஷங்களையும் எடுத்துப் பொருந்தச் சொல்லுகின்றார்.

தமிழ் மொழி வாழவேண்டும். வானமளந்த வண் மொழி வழங்கவேண்டும். தே மதுர தமிழோசை உலகமெல்லாம் பரவவேண்டும். தேசியக் கல்விவேண்டும். "மந்திரத்தை முணுமுணுத்து ஏட்டை வரிசையாக அடுக்கி அதன் மேல் சந்தனத்தை" யும் மலரையும் இடுவதல்ல சரஸ்வதிக்குப் பூஜை.

"வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி"

என்று இருத்தல் வேண்டும். "ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை, ஜாதியில் இழிவு கொண்ட மனிதரென்ப திந்தாயாவில் இல்லையே"

[illegible]

மனிதா தம்மை யமராகளாக்கவே.
வரும்
புதிமைப்பெண்ணின் சொற்களுஞ் செய்கையும்
பொய்மை கொண்ட கலிக்குப் புதிதன்றி
சதுமறைப்படி மாந்தரிருந்த நாள்
தன்னிலே பொதுவான வழக்கமாம்.

என்று போற்றி ஸ்திரீ ஸ்வதந்திரியத்தை கொண்டாடுகிறார்.

புதிய காலத்தின் தன்மைக்கிணங்க ஒரு புதிய ஆத்தி சூடி ஒன்று இவர் பாடியிருக்கின்றார். அதில்,

அச்சந்தவிர்
ஏறு போல் நட
குன்றென நிமிர்ந்து நில்
கேட்டிலுந் துணிந்துநில்
கவ்வியதை விடேல்
சீறுவோர்ச் சீறு
நேர்படப் பேசு
நையப் புடை
புதியன விரும்பு
ரோதனந் தவிர்
வெடிப்புறப் பேசு
வேதம் புதுமை செய்.

---

*பாரதியார் பாடல்கள் 'சுதேச கீதங்கள்' I,II பகுதிகள் ஒவ்வொன்றின் விலை ரூ. 1—0—0. 'சுவராஜ்யா' ஆபீஸில் கிடைப்பவை.

என்றிவை போன்ற இக்காலத்திற்கு வேண்டிய தத்துவங்களை, மற்றப்பாடல்களில் பரவிப் பாடிய பொருள்களைச் சுருங்க எடுத்துக் கூறியிருக்கின்றார்.

இச்சகத்துளோ ரெல்லாம்
எதிர்த்து நின்ற போதினும்
துச்சமாக வெண்ணி நம்மை
தூறு செய்த போதினும்
பிச்சை வாங்கி யுண்ணும் வாழ்க்கை
பெற்று விட்ட போதினும்
இச்சை கொண்ட பொருளெலா
மிழந்து விட்ட போதினும்
நச்சை வாயிலே கொணர்ந்து
நண்பரூட்டு போதினும்
உச்சி மீது வானி டிந்து
வீழுகின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே.

என்று இவர் பாடிய பாட்டைக் கேட்டாலே சகல பயமும் தீரும். புதிய தைரியம் உண்டாகும்.

சக்தியற்ற இந்தியரைக்கண்டு இவர் பரிதபித்து பாரதமாதாவை காளி பராசக்தி ஸ்வரூபமாய்க் கொண்டு ஸ்தோத்தரித்துப்பாடிய பாடல்களும் அவள் அருளி அளித்த முருகக்கடவுளைப் பிரார்த்தித்து பாடிய பாடல்களும், அக்கிநிதேவன் மீதும் கண்ணன் மீதும் பாடிய பாடல்களும் எல்லாம் தேசிய உணர்ச்சியை வேண்டி இந்தியரின் பேதமை, அறிவீனம், தாழ்மை, மனக்கலக்கம், அச்சம் இவை கெடவேண்டுமென்றே பாடிய பாடல்கள் ஆதலால் இவையும் "சுதேச கீதங்கள்" என்று சேர்க்கப்பட்டன. இது மிகவும் பொருத்தமானதே.

இவர் பாடல்களின் சொல்லழகு முழுமையும் எடுத்துக்காட்ட முடியாது. இங்கு சில உதாரணங்கள் மட்டும் எழுதலாம்.

(1) மங்கிய தோர் நிலவினிலே, கனவிலிது கண்டேன்
வயது பதினாறிருக்கும் இளவயது மங்கை
பொங்கி வரும்பெரு நிலவு போன்ற வொளி முகமும்
புன்னகையின் புது நிலவுபோற்ற வருந் தோற்றம்
துங்கமணி மின் போலும் வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப்பாரென்று சொன்னாள்.—என்றும்

(2) மந்த மாருதத்தில்—வானில்
மலையினுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லும் அங்குன்
செம்மை தோன்று மன்றே—என்றும்

(3) அமுதூற்றினை யொத்த இதழ்களும்
நில வூறித் ததும்பும் விழிகளும்—என்றும்

(4) வெள்ளை நிலா இங்கு வானத்தை மூடி
விரிந்து பொழிவது கண்டாய்—என்றும்

(5) சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையென்னும்
குழியில் வீழ்ந்து குமையாதீர்!—என்றும்

(6) பிறர்-காட்டிய வழியிற் சென்று மாட்டிக் கொள்வார்
கண்ணிலாக் குழந்தைகள்போல்—என்றும்

(7) ஆன்மவொளிக்கடல் மூழ்கித்திளைப்பவர்க்!
கச்சமுமுண்டோடா!—என்றும்

(8) வானை நோக்கி கைகள் தூக்கி
வளருதே! தீ! தீ! இந்நேரம்—என்றும்

(9) நல்லின் புறஞ்சோதி
தரணி முற்றுந் ததும்பி யிருப்ப
மானவன்றனுள்ளத்தில் மட்டும்
வந்து நிற்கும் இருளிது வென்னே
என்றும்

(10) முழுமைசேர் முகத்தினாய், வா, வா! வா என்றும் சொல்லிய சொற்களின் அழகு போல இன்னும் அநேக பதங்கள் அழகு நிறைந்திருக்கின்றன.

இவர் தேசபக்தர்கள் மீது பாடிய பாடல்கள் கேட்போரையுருக்கும் தன்மைவாய்ந்தன. பிஜித்தீவிலே ஹிந்து ஸ்திரீகளின் அவஸ்தையை விளக்கும் பாட்டிலும், "சுதந்திரதாகம்" என்ற பாடலிலும் கருணை ரசம் ததும்பியிருக்கின்றன. தமிழ் மொழியின் வலிமையையும் கௌரவத்தையும் நன்கு காட்டுவன "புதியருஷியா" "மழை" "ஊழிக் கூத்து" என்ற பாடல்கள். உதாரணமாக "ஊழிக்கூத்தில்"

"பாழாம் வெளியும பதறிப்போய் மெய்குலையச்
—சலனம் மயிலும் சக்திக்குலமும் வழிகள் குலைய
—அங்கே ஊழாம் பேய்தான் "ஒஹோஹோ"
என்றலைய—வெறித்து நமித்திரிவாய், செறு
வெங்கூத்தே புரிவாய், அன்னை, அன்னை."

இவர் பாட்டுகளின் பெருமை முழுதும் எடுத்துரைப்பதானால் வளரும். சுருங்கச்சொல்லில், தற்கால நாகரீகத்திற்கிணங்க, பழைய பண்டிதரும் ஒப்பும்படி எழுதப்பட்ட இந்த பாடல் புஸ்தகங்களை தமிழபிமானம் உள்ள ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கவேண்டும். முதற் புஸ்தகததில், பாரதியார் மனைவி செல்லம்மா எழுதிய முற்கூற்றும், அதிலுள்ள சில பாடல்களை பாரதியார் காலத்திலேயே அச்சிட்டபோது அவர் அவைகளுக்கு எழுதிய முகவுரைகளும் கவனிக்கத்தக்கவை. பாரதியாரின் இல்லற வாழ்க்கையை சுருக்கமாக சோம சுந்திரபாரதியார் என்பவர் முதல் புஸ்தகத்தில் எழுதியிருக்கின்றார். இரண்டாவது புஸ்தகத்தில், சக்கரைச் செட்டியார் என்ற பாரதியாரின் நண்பரொருவர் அவரது தேசியவாழ்க்கையைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதி யிருக்கின்றார். பாரதியாரின் பாடல்களின் திறனைப்புகழ்ந்து, மெய்க்கவிதையின் குணங்களை விளக்கும் இவர் பாடல்களை படிப்பது அவசியம், நாம் உணர்ச்சியிலும் தேர்ச்சியடையவேண்டும், ஊக்கம் பெறல் வேண்டும் தாய்பாஷையில் வளரவேண்டும், இந்த புஸ்தகங்கள் ஒவ்வொரு பள்ளிப்பிள்ளையின் கையிலும் இருத்தல் வேண்டும், இப்பாடல்கள் எங்கும் பரவவேண்டும் என்று வற்புறுத்தி, ஸ்ரீமான் சே. ஸ்ரீனிவாஸ ஐயங்கார் எழுதியிருக்கும் முகவுரையிலுள்ள புகழ்ச்சி யெல்லாம் இவற்றிற்குத்தகும். என்று இந்தப் புஸ்தகங்களைப்படிப்பவர் எவரும் கொள்வர்.

ஆந்திர ஆயுர்வேத வைத்திய சாலை

லிமிடெட்.

19, ஆரிஸ் ரோட்டு, சென்னை.

டாக்டர் A. லக்ஷ்மிபதி

Founder and Managing Director.

சகல வியாதிகளுக்கும் சாஸ்திர முறைப்படி

தயாரிக்கப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.

கியாட்டலாக்குக்கு எழுதுங்கள்.

காஞ்சீபுரம் கருடசேர்வை

விளம்பரங்கள்.

நாளது வைகாசிமீ உற்சவத்தில் ஏராளமான ஜனங்கள் வெளியூர்களிலிருந்து சேருவார்கள். ஷை காலத்தில் துண்டுபிரசுரங்கள், நோட்டீசுகள், படமுள்ள விளம்பரங்கள் முதலியன வீடுவீடாகவும் முக்கிய இடங்களிலும், விநியோகப்படுத்தி வியாபாரவிருத்தி செய்வதற்கு தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். விவரங்களுக்கு போதுமான தபால் முத்திரைகளுடன் எழுதவும்.

MADRAS ADVERTISINGS

(சென்னை விளம்பரங்கள்).

10, VENKAIER STREET, MADRAS.

வேண்டும்

அளவு 27" × 17" மேற்படாத

பிரகடனங்கள்

ஜட்காவண்டி

மேற்கூரையில் ஒட்டுவதற்கு

நூற்றுக்கு

தினத்திற்கு ரூ. 5-0-0

வாரத்திற்கு ரூ. 21-0-0

தமிழ் உலகு

புதன் கிழமைதோறும் வெளிவரும்

புதிய தமிழ் பத்திரிகை.

16, பசுபதி அக்கிரஹாரம், மைலாப்பூர்.

கலியாணம்

கலியாணகாலத்திற்கு ஏற்க காகிதங்கள், நேர்த்தியான கார்டுகள், விருந்துக்கழைக்கும் லிகிதகங்கள் முதலியவை எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் இருக்கின்றன. அவைகுறைந்தசார்ஜுக்கு அழகாக அச்சிட்டு கொடுக்கப்படும். ஒரு முறை பரிக்ஷித்து பார்க்கலாம்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில்

டி. சுந்தரவரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,

'தமிழ் உலகு' கார்யாலயத்தில் ஆர். பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.